**தேசிய போக்குவரத்து ஆணைக்குழும - 2023**

-----------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கைப் பொதுத்துறைக்கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறிப்பிட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான நியமத்தின் 76 – 87 ஆம் பந்திகளுக்கு இணங்க நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச்சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு நிதி நிலைமைக்கூற்றின் முன்பக்கத்தில் தனியாக காட்டப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவின் ரூபா 30,685,625 ஆன பெற வேண்டிய இடர்க்கடன் பெற வேண்டிய காலப்பகுதியின் அடிப்படையில் நடைமுறையல்லாச் சொத்துக்களாக காட்டப்படுவதற்குப் பதிலாக அக்கடன் மீதி நடைமுறைச் சொத்துக்களின் கீழ் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. | வரைவு கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் பெற வேண்டிய இடர்க்கடன் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக பிரிக்கப்பட்டு காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | கணக்கீட்டு நியமத்தின் . பிரகாரம் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் தனித் தனியாகக் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்டிருந்த ரூபா 172,124,805 பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சபைக்குச் சொந்தமான தற்போது பயன்பாட்டில் உள்ள பூச்சிய நிகரப் பெறுமதியுடனான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீண்டும் மீளாய்வு செய்யப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | கணக்கீட்டு நியமத்தின் . பிரகாரம் மீண்டும் பயன்படுத்தக்கூடிய சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யயப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்து மூலமான சான்றுகள் இன்மை

| விடயம் | பெறுமதி ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| டென்டர் வைப்பு | 94,727,804 | டென்டர் வைப்புப் பதிவேடு | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது மீளச் செலுத்த வேண்டிய டென்டர் வைப்பு பெறுமதிக்கு சமப்படும் வகையில் திட்டமிட்டதன் பிரகாரம் அட்டவணையைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | டென்டர் வைப்புப் பதிவேடொன்று பராமரிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வவுனியா மலசலகூட அமைப்பின் பராமரிப்பிற்காக 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை பெற வேண்டிய பெறுமதி ரூபா 1,536,150 ஆக இருந்த போதிலும் இத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை வவுனியா மலசலகூட அமைப்பின் பராமரிப்பிற்காக ஒப்பந்தம் செய்து கொண்ட நிறுவனத்தினால் செலுத்தப்படாத பெறுமதி ரூபா 1,536,150.00 ஆன தொகை அந்நிறுவனத்தினால் வைக்கப்பட்டுள்ள ரூபா 1,512,000.00 ஆன விலைமனு காப்பீட்டுத் தொகையிலிருந்து கழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. | பெற வேண்டிய தொகை ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதமின்றி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டம் | | | |
| 18 ஆம் பிரிவு | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்கு இடையில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உள்ள போதிலும், சாலைப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினாலும் மாகாணங்களுக்கு இடையிலான வழித்தடங்கல்களுக்கான 5 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக ஆணைக்குழு எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | மாகாணங்களுககு இடையிலான வழித்தடங்கல்களில் இயங்குவதற்காக சாலைப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஊடாக வழஙகப்படுவதற்கு பணிப்பாளர் சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் கையளித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) பெறுகை வழிகாட்டிக் கோவை | | | |
| 5.4.8 ஆம் பிரிவு | பஸ்டியன் மாவத்தை பேருந்து நிலையத்தின் 80 சேதமடைந்த மின்கம்பங்களை புனரமைப்பிற்காக ஒப்பந்தம் ரூபா 1,268,000 ஆன தொகைக்கு தனியார் | ஒப்பந்ததாரரே இந்தப் பணிக்கான செயற்திறன் காப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு தவறியிருந்தார்.<br><br>எவ்வாறாயினும், | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் காப்பீடொன்று பெறப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 5 சதவீதமான செயற்திறன் காப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 492,915,436 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 181,260,633 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 311,654,803 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வீதி அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 332,392,537 ஆல் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக இருந்தது.

**2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

2023 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆணைக்குழுவின் முக்கிய வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ள வீதி அனுமதிப்பத்திர கேள்வி வருமானம் 150 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 2.22 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் விகிதமான 2.99 உடன் ஒப்பிடும் போது குறைந்த மதிப்பிற்கு கொண்டு வரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களுடன் தொடர்பான 272 சாலை அனுமதிப்பத்திரங்களுக்கான புதுப்பித்தல் வருமானம், 27 டென்டர் அனுமதிப்பத்திரங்களுக்கான வருமானம் மற்றும் அதன் மீதான தண்டப் பணம் ரூபா 45,889,440 ஆக இருந்ததுடன் அது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன் கணக்குகளில் வெளிக்காட்டப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது, ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறிப்பிட்ட வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | அறவிடப்பட வேண்டிய தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2023 செப்டெம்பர் 11 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் අමප/23/1597/608/060-1 இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட | பொருளாதார முகாமைத்துவத்திற்கான அமைச்சரவை இச்செயற்திட்டத்தினை | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உரிய காலப்பகுதிக்குள் |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை போக்குவரத்து அட்டை செயற்திட்டத்திற்காக ஆணைக்குழு ரூபா 391,441 ஆன தொகையை செலவிட்டிருந்த போதிலும் சாத்தியக்கூறு ஆய்வுகளின்றி ஆரம்பிக்கப்படடிருந்த இச்செயற்திட்டம் மீளாய்வாண்டின்போது தோல்வி அடைந்தமையால் நிறுத்தப்பட்டிருந்தது. | முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் நிலைமையொன்று காணப்படுவதால் இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டு புதிய செயற்திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையால் இந்தப் போக்குவரத்து அமைச்சிற்கு இப்பணி கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சரவையால நியமிக்கப்பட்ட குழுவின் அவதானிப்புக்களின் அடிப்படையில் உரிய எதிர்கால நடவடிக்கைகள் போக்குவரத்து அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | செலவு நடவடிக்கைகளை மேற்கொள்வது நிறுவனத்தின் பொறுப்பாகும். |
| (இ) | 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவில் ஆணைக்குழுவின் கடமைகளின் கீழ் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு ஆணைக்குழுவிற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆணைக்குழு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான முறையான முறைமையொன்றை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை என்பதுடன் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் டெண்டர் பெறுமதி, குறைந்தபட்ச தொழில்நுட்ப மதிப்பின் அடிப்படையில் ரூபா 3000, ரூபா 10,000 மற்றும் ரூபா 15,000 போன்ற பெறுமதிகளின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. மேலும் 2024 மே மாதம் வரையிலும் ஆணைக்குழுவினால் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டம் திருத்தப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட புதிய முறைமையின் மூலம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பயணிகள் சேவை அனுமதிப்பத்திர கட்டண அறவீடு மீளாய்வு செய்வதற்காக பணிப்பாளர் சபையால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அக் குழுவின் அறிக்கை யூன் மாதம் நடைபெறவுள்ள பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>சட்டத் திருத்தம் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதன் மும்மொழியிலான மொழி பெயர்ப்பு பணிகள் | சட்டத்தின் பிரகாரம் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு உரிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் பொதுமக்கள் முறைப்பாடுகள் பிரிவிற்கு பெறப்பட்ட 4,625 முறைப்பாடுகளில் 3,476 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டிருந்ததுடன் 1,149 முறைப்பாடுகள் இன்னும் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அது மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 25 சதவீதம் மட்டுமே ஆகும். | முடிக்கப்படாத 266 முறைப்பாடுகளில், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்தமைக்கு மேலதிகமாக காவல் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும்வரை முடிக்கப்படாத முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகளில் பங்கேற்காததால் விசாரணைகள் முடிக்கப்படாத முறைப்பாடுகள் அடங்குகின்றன. மேலும், தற்போது முடிக்கப்படாத முறைப்பாடுகளுக்கு நினைவூட்டல் செய்யப்படுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொதுமக்களின் முறைப்பாடுகள் உடனடியாகத் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |

**4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கு இடையிலான 300 புதிய தொலைதூர சமிக்ஞைக் கம்பங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 10,340,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 242,000 செலவிடப்பட்டு 84 சமிக்ஞைக் கம்பங்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 216 கம்பங்களை நிர்மாணிப்பதற்கு முடியாதிருந்ததுடன் அது சதவீதமாக 72 சதவீதம் ஆகும். மேலும் சமிக்ஞைக் கம்பங்கள் நிர்மாணிப்பதற்கான உண்மையான கிரயத்துடன் ஒப்பிடுகையில் மதிப்பிடப்பட்ட கிரயம் 90 சதவீதத்தினால் அதிகமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நீண்ட தூர சேவை பேருந்துகளுக்கு வரையறுக்கப்பட்ட சமிக்ஞை பதாகைகளை வழங்குதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஒதுக்கங்களின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு 2023.12.11 வரை நிதியமைச்சிடமிருந்து அங்கீகாரம் பெறப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் அதிகபட்ச நோக்கங்கள் அக்காலப் பகுதிக்குள் முடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளர்வாண்டில் போக்குவரத்து முகாமைத்துவ முறைமையை நடைமுறைப் படுத்துவதற்காக ரூபா 470,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலும் அது தொடர்பான பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நகர்ப்புற போக்குவரத்து திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் பேருந்து முன்னுரிமை பாதைகள், Park & Ride, Car Pooling போன்ற நகர்ப்புற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான முன்மொழிவுகளை உருவாககுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் பேருந்து முன்னுரிமை பாதைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் Park & Ride செயற்திட்டம் கடந்த வருடங்களில் செயல்படுத்தப்பட்டாலும், அவை வெற்றிகரமாக செயல்படுத்தப் படாமையால் மற்றொரு மாற்று முறையொன்று கண்டறியப்படும் வரை, இச்செயற்திட்டத்தின் கீழ் நகர்ப்புற போக்குவரத்து முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்துவது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |